பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 297

சனிக்கிழமை
20 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**முல்லையில் நிலமிழக்கும் தமிழர்கள்**

விரிவு பக்:- 06




## திலீபனின் உருவப்படம் பொலிஸாரால் அகற்றம்

திருகோணமலையில் அடாவடி




திருகோணமலை, செப். 20
திருகோணமலை பிரதான பொலிஸ் நிலையத் துக்கு உட்பட்ட சிவன் கோவிலடிப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த, தியாகதீபம் திலீபனின் உருவப்படம் பொலிஸாரால் அகற் றப்பட்டுள்ளது. 11

# காற்றாலைகள் எமக்கு வேண்டவே வேண்டாம்

ஜனாதிபதி செயலகம் முன்பாக மன்னார் மக்கள் போராட்டம்

**கொழும்பு, செப்ரெம்பர் 20**

**மன்னாரில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள காற்றாலைத் திட்டத்துக்கு எதிராகவும், கனிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற் றுப் பெரும் போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.** 11

மீனவர்கள் மீதான தாக்குதல்

## கைதானோருக்கு மறியல் நீடிப்பு!

மேலும் இருவருக்கு வலை

திருகோணமலை, செப். 20
கற்கோவளம் பகுதியில் உள்ள மீனவ வாடிகள் மீதும், மீனவர்கள் மீதும் தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டில் கைதுசெய்யப் பட்ட ஆறு சந்தேகநபர்க ளுக்கும் விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது. 11

## வல்லிபுரம் ஆழ்வாருக்கு மஹோற்சவம் நாளை!



யாழ்ப்பாணம், செப். 20
துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில் வரு டாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்ப மாகி 11

## கூலர் வாகனம் மோதி ஜேர்மனியப் பிரஜை பலி

வவுனியா, செப். 20
வவுனியா கனகராயன்கு ளம் பகுதியில், நேற்று இடம்பெற்ற விபத்தில் ஜேர் மனிய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் நோக் கிப் பயணித்த 11

## போதைப்பொருள் வியாபாரி சுற்றிவளைப்பில் கைதானார்

யாழ்ப்பாணம், செப். 20
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருள் களை நீண்டகாலமாக மாணவர்களுக்கு விற்று வந்த போதைப்பொருள் வியாபாரி, சிறப்புச் சுற்றி 11



## பேருந்திலிருந்து விழுந்து இளைஞர் பரிதாபச் சாவு



கிளிநொச்சி, செப். 20
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறிவியல்நகர் பகுதியிலிருந்து உருத்திரபுரம் பகுதி நோக்கி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற் றிச்சென்ற பேருந்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞர் ஒரு வர் உயிரிழந்துள்ளார். 11

## ராஜபக்சக்களின் சகாப்தம் மீண்டும் வர வாய்ப்பில்லை



அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 20
இலங்கையில் ராஜபக்சக்க ளின் அரசியல் சகாப்தம் முடிந்துவிட்டது. அவர்களால் மீண்டுமொரு அத்தியா யத்தை ஆரம்பிக்கமுடியாது என்று அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.
ராஜபக்சக்களின் அரசியல் முடிவுக்கு வரவில்லை. இலங்கையில் விரைவில் 11

**முச்சந்தி முரளி**

'எந்த அரசாங்கம் வந்தாலும் உப்பிடி நினைவேந்தலைக் குழப்பிற வேலையள் மட்டும் நிக்காது கண்டியளோ'

## ஐ.தே.க. ஆண்டுவிழாவில் சஜித் பங்கேற்கமாட்டார்

கொழும்பு, செப். 20
ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்துகொள் ளமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது 11

ஏழாலையில்

## மயங்கி வீழ்ந்து பூசகர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 20
ஏழாலையில் உள்ள ஆலயத் தில் வழிபாடுகளை மேற்கொள் வதற்காகச் சென்ற பூசகர், மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
மானிப்பாய் - சுது மலைப் பகுதியைச் 11

## காற்றுமாசுபாட்டை கட்டுப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப். 20
யாழ்ப்பாணத்தில் காற்றுமாசுபாட்டைக் குறைக்கத் தேவையான அனைத்துச் சாத்தியமான நடவடிக்கை களையும் எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் யாழ். மாநகரசபைக்கு நேற்று 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக விபரம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 19.09.2025 | 4199 | J | 11 21 36 60 | விசேட எழுத்து J |
| ஹந்தஹண ராசி சுப பலன் | 19.09.2025 | 1266 | | 18 22 32 36 | வெற்றி இலக்கினம் கன்னி |
| NLB ஜய | 19.09.2025 | 0225 | E | 6 0 3 5 | |
| மெகா பவர் | 19.09.2025 | 2305 | U | 13 14 37 80 | சுப்பர் இலக்கம் 23 |
| மஹஜன சம்பத | 19.09.2025 | 5957 | T | 6 4 6 4 5 7 | |
| தன நிதானய | 19.09.2025 | 1987 | V | 32 39 54 59 | விசேட எழுத்து V |
| அத சம்பத | 19.09.2025 | 0532 | T | 6 4 5 7 | |
| சுப தவசக் | 19.09.2025 | 0073 | | 13 14 38 44 | வெற்றி இலக்கினம் மேஷம் |

# சர்வதேச விசாரணைப்பொறிமுறையே அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலைத் தரும்!

## சர்வதேச குற்றவியல் சட்டநிபுணர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.20**

**இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையின் ஊடாக மாத்திரமே அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை அடையமுடியும் என சர்வதேச குற்றவியல் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

தேசிய கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் 'இலங்கையில் சர்வதேச பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்' எனும் தலைப்பில் கலந்துரையாடலொன்று கடந்த வாரம் ஜெனிவா ஊடக அமையத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச குற்றவியல் வழக்கறிஞரான அலைன் வேனர், சர்வதேச சட்டத்தரணி மரியம் பொஸ்டி, பாலியல் மற்றும் பாலின வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர் ஜூலி டுபே கக்னன், தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஸ்ரீஞானேஸ்வரன் (நிகழ்நிலை முறைமையில்) ஆகியோர் பங்கேற்றிருந்தனர். அவர்கள் உள்ளகப்பொறிமுறைகள் மூலமாகவன்றி, சுயாதீன சர்வதேச விசாரணைகளின் ஊடாக மாத்திரமே இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்ய முடியும் என்று பொதுவாக வலியுறுத்தினர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சர்வதேசக் குற்றவியல் வழக்கறிஞர் அலைன் வேனர், தமிழ்மக்களின் மீண்டெழும் தன்மையைப் பாராட்டியதுடன் நீதிக்கான தொடர் போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் ஊடாக ஆதாரங்களைத் திரட்டுவதற்கான ஐ.நாவின் முயற்சியை அங்கீகரித்த அவர், இருப்பினும் சர்வதேச சுயாதீன விசாரணையின் ஊடாக மாத்திரமே அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை அடையமுடியும் என்று சுட்டிக்காட்டினார்.

ஆதாரங்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட முழுமையான வழக்குக் கோப்புகளைத் தயாரிக்கவேண்டிய பிரதான வகிபாகத்தை தமிழ்ச்சமூகம் கொண்டுள்ளது என்று குறிப்பிட்ட அலைன்வேனர், பல்வேறு தேசிய நீதிமன்றங்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகள் ஊடாக தமிழர்களின் நீதியைக்கோரும் செயன்முறை தொடரவேண்டும் என்றும் தெரிவித்தார். (எ-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | 0665 | B | 2 6 9 1 7 1 |

## Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | 2931 | Z | 04 23 61 76 |

## சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | N | 03 05 36 60 | 5092 |

## SASIRI DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | 0773 | 34 42 45 |

## லக்ன ராசி DLB

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | விருச்சிகம் | 11 19 29 36 | 4643 |

## KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | Z | 12 | 39 43 68 73 | 2107 |

## அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.09.2025 | வெள்ளிக்கிழமை | W | 01 38 43 48 | 2757 |

# சொத்து விடயத்தில் 'கிளீன்'

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, செப்.20

சொத்து விடயத்தில் எதையும் மறைக்கவில்லை. சகல ஆவணங்களையும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன். சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விவராங்களுக்கு மேலதிகமாக என்னிடம் சொத்துகள் இருந்தால் அவற்றை அரசுடமையாக்கமுடியும். என் சொத்துகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய அமைச்சர் வசந்த சமரசிங்க தற்போது என்னைவிடச் செல்வந்தராக உள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சொத்துகள் தொடர்பில் நாங்கள் எதனையும் மறைக்கவில்லை. கிராமங்களுக்குச் சென்று மக்களிடம் நிதி பெற்று நாங்கள் அரசியல் செய்யவில்லை. கப்பம் பெற்றும், பொய்யுரைத்தும் அரசியல் செய்யவில்லை.

2010ஆம் ஆண்டு முதல் இன்றுவரை உரிய நேரத்தில் சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான விவரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன்.

எனது மனைவியின் சொத்துகளுடன் என்னைத் தொடர்புபடுத்தி ஒருதரப்பினர் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக என்னிடம் சொத்துகள் ஏதும் காணப்படுமாயின் அவற்றை அரசுடமையாக்கி மக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

அணியும் ஆடைகள்கூட பிறர் வழங்குவதாகக் குறிப்பிட்டவர்களின் சொத்து மதிப்பு பல கோடிகளாக உள்ளது. நாட்டு மக்கள் இனியேனும் உண்மையை விளங்கிக்கொள்ளவேண்டும் - என்றார். (எ-இ)

# டான் பிரியசாத் கொலை; சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, செப்.20

டான் பிரியசாத் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி உட்பட மூவர் கேகாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு வெல்லம்பிட்டிப் பிரதேசத்தில் உள்ள லக்சந்த செவன அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி டான் பிரியசாத் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் புறக்கணிப்பு!

## வேலணையில் போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.20

மக்கள் பிரதிநிதிகளாகிய உறுப்பினர்களைப் புறக்கணித்து வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெறவிருந்தநிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் ஜெ.ரஜீவனைப் பிரதேச செயலக வளாகத்துக்குள் உள்நுழையவிடாது தடுத்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன்னெடுக்கப்பட்ட குறித்த எதிர்ப்புப் போராட்டத்தில் இணைத்தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியதால் பிரதேச செயலகச் சூழலில் சிறிதுநேரம் பெரும் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

வேலணைப் பிரதேச உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இருவரைத் தவிர ஏனையவர்கள் அனுமதிக்கப்படாது தடுக்கப்பட்டதையடுத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இங்கு அரசியல் ரீதியாகப் பாரபட்சம் காட்டி உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பிரதேச ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் ரஜீவனின் இயலாமையுடன் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு முகங்கொடுப்ப தைத் தவிர்ப்பதற்காகவுமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று உறுப்பினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து உறுப்பினர்களின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்த ஒருங்கிணைப்புக்குழுவின் பிரதேச இணைத்தலைவர், கூட்டத்துக்கு உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுத்துக் கூட்டத்தை ஆரம்பித்தார். (ச-27,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் மந்திரிமனையின் பாரம்பரியத்தைக் காப்போம்

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.20**

**இலங்கையில் காணப்படும் பாரம்பரியமான மாளிகைகளில் ஒன்றான நல்லூர் மந்திரிமனை பாதுகாக்கப்படவேண்டியதொன்று. இதனைப் பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரோடு கலந்துரையாடி, பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை பெய்த மழை காரணமாக நல்லூர் இராசதானி காலத்து மந்திரிமனையின் ஒரு பாகம் இடிந்து வீழ்ந்தது. இந்நிலையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் அடையாளமாக உள்ள நல்லூர் மந்திரிமனையை நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்றுமுன்தினம் இரவு பார்வையிட்டார். அவருடன்கடற்றொழில்அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோரும் உடன் சென்றனர்.

மந்திரிமனையின் தற்போதைய நிலைமை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவர்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு எடுத்துக்கூறினர். (எ-66)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் எழுவருக்கும் மீண்டும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13ஆம் திகதி நெடுந்தீவு அருகே 7 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மீண்டும் நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 7 மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (க-27)

# பணம், நகை பஸ்ஸில் மாயம்

யாழ்ப்பாணம், செப். 20

தனியார் பேருந்தில் பயணம் செய்த பெண்ணொருவர் 65 ஆயிரம் ரூபா பணமும் முக்கால் பவுண் சங்கிலியும் கைப்பையில் காணாமற்போயுள்ளதாகக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை பளைக்கும் கொடிகாமத்துக்கு இடையில் இடம்பெற்றுள்ளது. கொடிகாமத்தில் இறங்கி கைப்பையைப் பார்த்தபோது பணமும் நகையும் காணாமற்போனமை தெரியவந்துள்ளது என அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-159)



# GovPay செயலி யாழில் அறிமுகம்

யாழ்ப்பாணம், செப்.20

அரசாங்கத்தின் டிஜிற்றல் பணம் செலுத்தும் செயலி (GovPay) அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் துறைமுகம் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

GovPay செயலி மூலம் மக்கள் அரசாங்க சேவைகளைப் பாதுகாப்பாகவும், சுலபமாகவும், நம்பகத்தன்மையுடனும் பயன்படுத்த முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் லங்கா பே (Lanka pay) துணை தலைமை அதிகாரி, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், பிரதம கணக்காளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டாரகள். (எ-இ)



# ஹெரோய்ன் வியாபாரம்; குருநகரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் நீண்டகாலமாக ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 36 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குருநகர்ப் பொலிஸ் காவலரணில் கடமையிலிருந்த பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-41-27.20)




## காகம் இருக்க கரண்ட் வந்திச்சாம்

காகம் இருக்க பழம் விழுந்த கதையைக் கேள்விப்பட்டு இருப்பியள். ஆனால் கரண்ட் வந்த கதை கேள்விப்பட்டிருக்கிறியளோ. யாழ்ப்பாணம் ரவுனுக்க இருக்கிற பண்ணை மீன்சந்தையில ரண்டு மூண்டு நாளைக்கு முதல் திடீரெண்டு வந்து கரண்டை வெட்டிப்போட்டினம். இப்பிடிச் சொல்லாமல் கொள்ளாமல் கரண்டை வெட்டினதால மீன் யாவாரம் செய்யிறவைக்கு பெரும் இட்டுமுட்டாப் போட்டுது. மோட்டர் வேலைசெய்யாததாலமீனைக் கழுவிறதுக்கும், மேடையைக் கழுவிறதுக்கும் தண்ணி இல்லாமல் அங்கால இஞ்சால ஓடுபட்டுப் பரல்களில வேற இடங்களில இருந்து கொண்டந்தும் தான் ஒருமாதிரிச் சமாளிச்சவை. அதைவிட இப்ப கூடுதலா எல்லா மீன் யாவாரிமாரும் எலக்ரோனிக் தராசிலதான் மீனை நிறுத்துக் குடுக்கிறவை.அந்தத் தராசு வேலை செய்யிறதுக்கும் கரண்ட் தேவை. அதோட லைற், பான்(மின்விசிறி) வேலை செய்யாததால மீன் சந்தை முழுக்க இலையான் மொய்ச்சுப்போட்டுது. இலையான் இப்பிடி மொய்ச்சால் பிறகு பி.எச்.ஐ.மார் வந்து சுகாதாரக் கேடு எண்டு தண்டம் கூட போடவும் சான்ஸ் இருக்குது.

இப்பிடி எல்லாப் பக்கமும் சிக்கலா மாற, அவையள் முதலில முனிசிபலுக்கு விசயத்தைச் சொல்லியிருக்கினம். அவையள் "காசு எல்லாம் கட்டிட்டம். ஏன் கட் பண்ணினவை எண்டு தெரியேலை. பொறுங்கோ, என்னெண்டு பாக்கிறம்" எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் அவை அப்பிடிச் சொல்லிக் கனநேரமாகியும் கரண்ட் வரேலை. அதால அங்க இருந்தவை திசைகாட்டி எம்.பி. ஒருத்தருக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லியிருக்கினம். அந்த எம்.பி.யும் சந்தைக்கு உடனேயே வந்து, என்ன பிரச்சினை எண்டு பார்த்து, மின்சாரசபைக்காரரோடயும் முனிசிபல்காரரோடையும் இதைப்பற்றிக் கதைச்சிருக்கிறார். அவர் வந்து கதைச்ச நேரமாப் பார்த்து, கரண்டைக் கட் பண்ணினவை திரும்ப வந்து 'பியூசைப்'போட்டுவிட, கரண்டும் வந்திட்டுது. அப்ப சந்தையில நிண்டவை எல்லாம், திசைகாட்டி எம்.பி. "தன்ர முந்தின வேலைத்தளம் எண்டதால அங்க இருந்தவைக்குச் சொல்லித்தான் கரண்ட் வந்தது" எண்டு புகழ வெளிக்கிட்டிட்டினம். ஆனால் உண்மையில அந்த எம்.பி.யும் இது சம்பந்தமா உரியவையோட கதைச்சவர்தான் எண்டாலும், வெட்டுப்பட்ட கரண்ட் திரும்ப வந்ததுக்கு அவர் மட்டும் காரணமில்லை எண்டதுதான் உண்மை.

கரண்ட் வெட்டுப்பட்டால், அந்த 'பில்லுக்குரிய' முழுக் காசையும் கட்டினால்தான் திரும்ப கரண்ட் வரும். அப்பிடியிருக்க ஒரு எம்.பி. சொல்லி திரும்பக் கரண்டைக் குடுத்தவை எண்டால், அதுவும் ஊழல், அதிகாரத்துஷ்பிரயோக மோசடிக்குள்ளதானேவரும். அப்பிடியில்லாட்டி, அந்த சந்தைக் கட்டடக் கரண்ட் பில்லுக்கு தன்ர காசைப் போட்டுக் கட்டி, கரண்டை எடுத்துக் குடுத்திருக்க வேணும். அதுவும் அவர் செய்யேலை. அப்ப எப்பிடிக் கரண்ட் திரும்ப வந்தது? ஒவ்வொரு மாதமும் கரண்ட் பில்லுக்கான காசை, செக் (காசோலை) எழுதி அதின்மூலமாத்தான் முனிசிபல்காரர் கட்டுறவை. போனமாதக் காசுக்கும் அப்பிடித்தான் செக் எழுதி மின்சாரசபைக்குப் போட்டிருக்கினம். ஆனால் வங்கிப் பிரச்சினையால அந்த செக் மாறேலை. பில்லுக்குரிய காசு கட்டாட்டி கரண்டை வெட்டிற வேலை தனியாரிட்ட குடுத்திருக்கு. அதால முனிசிபல்காரர் பண்ணைச் சந்தைக் காசைக் கட்டேலை எண்டு அவை வந்து வெட்டிப்போட்டு போட்டினம். பிறகுதான் முனிசிபல்காரர், மின்சாரசபைக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்ல, அவையும் வங்கியில கேட்டு உறுதிப்படுத்தின பிறகுதான் திரும்ப கரண்ட் குடுத்திருக்கினம். அந்தநேரம் இந்தத் திசைகாட்டி எம்.பி.யும் சந்தைக்குப் போனதால அவரின்ர அருட்கடாட்சத்தாலதான் கரண்ட் வந்தது எண்டு எல்லாரும் நினைச்சிட்டினம் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர் பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனு கூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவு கள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முடிவு எடுப்ப தைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயி லுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும்நாளாக அமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.

**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லை களும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்ப தாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களை யும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சை யினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதி கரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறை வேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சி னைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது.

# புரட்டாதிச் சனி விரத மகிமை

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்



ஒவ்வோர் ஆண்டும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற சனிக்கிழமைகள் தோறும் சனிபகவானை நினைத்து மனம், வாக்கு, மெய்யால் வழிபாடு இயற்றுகின்ற மரபை இந்துக்கள் கடைப்பிடித்துவருகின்றனர். இந்தக் காலப்பகுதியில் அதிகாலை வேளையில் எழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகள் அணிந்து ஆலய வழிபாடு களில் ஈடுபடுவர். சைவ ஆசாரமுறைப்படி சமைப்பர். வாழையிலையில் பழம், பாக்கு, வெற்றிலையோடு அன்னமிட்டு அதற்கு உகந்த கறிகளைச் சேர்த்து சனீஸ் வரனுக்கு நிவேதனம் செய்வர். காகத்துக்கும் சாதம் வைத்து வழிபாடு இயற்றுவர்.

### சனீஸ்வரன்

சூரியபகவானுக்கும் சாயா தேவிக்கும் மகனாகப் பிறந் தவரே சனீஸ்வர பகவான். இவர் காசிக்குச் சென்று ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து தினமும் வழிபாடு இயற்றிவந்தார். அதன்பயன் கிரக பதவியையும் அடைந் தார். அதுமாத்திரமன்றி சிவனிடமிருந்து ஈஸ்வரப் பட்டத் தையும் பெற்றுக்கொண்டார்.

### கிரகங்களுள் ஈஸ்வரப் பட்டம் பெற்றவர்

கிரகங்களுள் ஈஸ்வரப் பட்டம் பெற்ற பெருமைக்குரிய வராகவும் தாமத குணமுடையவராகவும் சனீஸ்வரன் திகழ்கின்றார். மந்தன, பிணிமுகன், முதுமகன், முட வன், காரி என்றும் அழைக்கப்படுகிறார். சனீஸ்வரனுக் குப் பிரியமான உலோகம் இரும்பு. அது விதமே பிரிய மான மணியாக நலத்தையும், தானியங்களுள் எள், மலர்களுள் கருங்குவளை மற்றும் சுவை உணர்வில் கசப்பையும் விரும்பி ஏற்றுக்கொள்கின்றார்.

### நவக்கிரகங்களில் சக்திவாய்ந்தவர்

ஸ்ரீ சனிபகவான் நவக்கிரகங்களில் மிகவும் சக்திவாய்ந் தவர். தனக்கென்று தனி ஆதிக்கமும் கொண்டவர். தன் பார்வையினாலேயே நன்மை தீமைகளுக்கேற்ப பலன் களை அளிக்கும் வல்லமை உடையவர். வில்லைப் போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவர். நீலநிற மேனியுடை யவர், முடி தரித்தவர், சூலமும் வில்லும் விரதமும் அபய மும் கொண்ட நான்கு கரங்களையுடையவர். கருமல ரையும் நீல மலர்மாலையையும் புனைபவர். கருநிறக் குடையும் கொடியும் கொண்டவர். மேருவை வலம்வரு பவர்.

### சஞ்சாரம் செய்பவர்

வாழ்க்கையில் ஒருவருக்குப் பொங்குசனி வந்துவிட்டால் பொன்னும் பொருளும் வந்துசேரும். மங்குசனி வந்து விட்டால் நோய், நொடி, துன்பங்கள் ஏற்படும். ஒவ்வொ ருவருடைய வாழ்க்கையிலும் ஆயுள்காலம் முடிவடை வதற்கு அவர்களுடைய ராசியில் ஏழரை வருட காலம் சஞ்சாரம் செய்பவராக சனீஸ்வர பகவான் விளங்கு கின்றார்.

### புரட்டாதிச் சனிக்கிழமை வழிபாடு

புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் சனிபக வானை வழிபாடு செய்தால் சிறப்புகள் சேரும். சனிக்கு அதிபதி விஷ்ணு ஆகையால் விஷ்ணு ஆலயங்களில் விசேட வழிபாடு செய்துவருவது நற்பலனை அளிக் கின்றது.

### சனிதோசத்தை விலக்கலாம்

எள்ளு, கறுப்புத்துணி, நல்லெண்ணெய் முதலியவற்றை சனிக்கிழமைகளில் தானம் செய்வதனால் எமக்கு ஏற் பட்ட சனிதோசம் விலகிவிடுகின்றது. அத்துடன் செப்புப் பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டுத் தமது முகத்தை அதில் பார்த்துவிட்டு அதனையும் தானம் செய்யலாம். கறுப்புத்துணியில் எள்ளுப்பொட்டலம் கட்டி அதனைச் சிறிய மண்சட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டுத் தீபமாக ஏற்றி வழிபட்டு சனிதோசத்தைப் போக்கிக் கொள்ளலாம்.

### சனிநீராடு

ஏனைய விரதங்களுக்கு எண்ணெய் முழுக்கு விலக்கப் பட்டுள்ளது. சனி விரதத்துக்கு மட்டும் எண்ணெய் தேய்த்து நீராடவேண்டும். சனீஸ்வர பகவானின் வாக னம் காகம் ஆகையால் காகத்திற்கு உணவளிப்பதன் மூலம் சனிபகவான் தரும் கெடுபலன்களிலிருந்து விடு படலாம்.




# வலிகாமம் கிழக்கு பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.20

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவை நடத் திய பண்பாட்டுப் பெருவிழா பிரதேச செயலா ளரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான ஈஸ்வரானந்தன் தயாரூபன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை உரும்பிராய் கற்பக விநாயகர் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண விவசாய கமநல சேவைகள் அமைச் சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ கலந்து கொண்டார். (ச-41-17)

# மோகனதாஸ் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.20

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத் தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி யும், பரிசளிப்பு நிகழ்வும் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் ந.ஜெயகாந் தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரை யாளர் மா.இளம்பிறை, சிறப்பு விருந்தினர்களாக சட்டத்த ரணி ச.சயந்தன், சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி எச்.கியூ.ஐ. பாலித செனவி ரட்ன, சாவகச்சேரிப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர் சி.கபிலன், கௌரவ விருந்தினர்களாக நவாலி ஆரோக்கியவாச மருத்துவமனை மருத்துவர் திருமதி லியோன் புஸ்பராணி, தென்மராட்சி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் த.கோகுலன், சாவகச்சேரிப் பங்குத் தந்தை ம.ஞானேந்திரன் அடிகளார், மட்டுவில் பிள்ளை யார் கோயில் குரு ஜெகதீஸ்வரசர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25, 131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# எண்பிக்குமா அநுர அரசு?

இலங்கையில் உள்ள மாவட்டங்கள்தோறும், நீண்டகாலப் பிரச்சினைகள் நிலவும் - விசேட கவனிப்புத் தேவைப்படும் துறைகளுக்கு தனித்தனியான ஒருங்கிணைப்புக்குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். தற்போதைய அரச தரப்பினர்மீது சில விமர்சனங்கள் இருந்தாலும், அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த நகர்வுகளில் ஒன்றாக இதைக் குறிப்பிடலாம். மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கும் பெருவிருப்பின் பிரதிபலிப்பாகவும் இந்தத் திட்டம் அமைந்திருக்கின்றது என்றால், அதை மறுப்பதற்கில்லை.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் என்பவை இலங்கைக்குப் புதியவையல்ல. 'எதற்காக இருக்கின்றது எனத்தெரியாத 13ஆவது திருத்தத்தைப்போல' இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் எமது அரசாங்கங்களின் மாதாந்த அல்லது காலாண்டு அட்டவணையில் காலாகாலமாக இடம்பெற்றே வருகின்றன. அவற்றால், ஏதேனும் பயன்கள் உள்ளனவா என்று கேட்டால், 'இல்லை' என்பதே விவாதங்களுக்கு இடமின்றிய பதில். ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏராளமான தீர்மானங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இல்லாமல் அஸ்தமித்துப் போயிருப்பதே வரலாறு. இதற்கு மிக நல்ல உதாரணம் தையிட்டி விகாரை. பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விகாரைக் கட்டுமானம் சட்டவிரோதம் எனவும், எனவே கட்டுமானப்பணிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும், கடைசிவரைக்கும் அந்தத் தீர்மானத்தை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் அந்த விகாரை கட்டிமுடிக்கப்பட்டுவிட்டது. ஒருங்கிணைப்புக்குழுத் தீர்மானங்களை இறுக்கமாகப் பின்தொடரும் பொறிமுறையும் - எப்பாடுபட்டாவது தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற பெருவிருப்பும் எவரிடமும் இல்லாமையே இந்த நிலைக்குப் பிரதான காரணம்.

இந்த இழிநிலை அரசியலுக்கான ஒரு முற்றுப்புள்ளியாகவே, எந்தெந்தத் துறைகளில் எல்லாம் ஒரு மாவட்டம் நீண்டகாலப் பிரச்சினைகளைச் சந்தித்துள்ளதோ, அந்தந்தத் துறைகளுக்கெல்லாம் தனித்தனியான ஒருங்கிணைப்புக்குழுக்களை நிறுவும் முயற்சி அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம், அரசாங்கத்தின் நேரடிப்பார்வை பலப்படும், அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படும், துல்லியமான பிரச்சினைகள் மிகச்சரியாக அவதானிக்கப்பட்டு, நிறைவான தீர்வுகளைத் தேடுவதற்கு வழியேற்படும். ஆதலால்தான், இந்த முயற்சி பத்துடன் பதினொன்றாக அல்லாமல் தனித்துத் தெரிகின்றது நம்பிக்கை தருகின்றது. எல்லாவற்றுக்கும் மேல், ஊழலற்ற ஆட்சிக்கு - அதிகாரிகளின் நேரடிப் பொறுப்புக்கூறல் அவசியம். ஆக, ஊழலற்ற ஆட்சி என்பதை அநுர அரசாங்கம் ஊடக விளம்பரமாகக் கொண்டிருக்கவில்லை என்பதும் இந்தத் திட்டத்தின் ஊடாக நன்கு புலப்படுகின்றது.வடக்கு மாகாணத்தில் அரசாங்கம் நேரடியானதும் -தொடர்ச்சியானதுமான கண்காணிப்பைச் செலுத்தவேண்டிய விடயங்கள் பல உள்ளன. அவ்வாறான விடயங்களில் எல்லாம் அரசாங்கம் முடிந்தவரை தீர்வைத் தருவதற்கு, இந்தத் 'துறைசார் ஒருங்கிணைப்புக்குழுக்கள்' வழிசமைக்க வேண்டும். என்னதான் பொறிமுறைகள் இறுக்கமாக இருந்தாலும், இதயசுத்தியான நகர்வு இல்லாவிட்டால் எதுவும் பயனில்லை என்பதை இலங்கையர்கள் பல விடயங்களில் பட்டுணர்ந்துள்ளனர். அத்தகைய சபிக்கப்பட்ட போக்கு தமது ஆட்சியில் இல்லை என எண்பிக்கவேண்டியது அநுர அரசாங்கத்தின் பெரும் பொறுப்பாகும். அது கடமையும்கூட.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நாம் அறிந்திருப்பதையும் அறிந்துகொள்ளாமல்
இருப்பதையும் அறிந்துகொள்வதே
உண்மையான அறிவு.

—டால்ஸ்டாய்—




# சிறுவர்கள் சாட்சியமளிக்க பாதுகாப்பான தனியறை



## நீதிமன்றங்களில் அமைக்க நடவடிக்கை

**கொழும்பு, செப்.20**

**பாதிப்புகளுக்கு உள்ளாகும் சிறுவர்கள் பாதுகாப்பான முறையில் சாட்சியங்கள் வழங்குவதற்காக நீதிமன்றங்களில் தனியாக சாட்சி அறைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

சிறுவர்கள் பாதுகாப்பாகச் சாட்சியமளிக்கக்கூடிய டிஜிற்றல் வசதிகளைக்கொண்ட சாட்சி அறை ஒன்று கண்டி மேல் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களுக்கு பாதுகாப்பான முறையில் சாட்சியமளிக்கக்கூடிய டிஜிற்றல் வசதியுடனான சாட்சி அறை ஒன்று திறக்கப்படுவது இதுவே முதன்முறை. இது இந்த நாட்டின் நீதிமன்றக்கட்டமைப்பின் திருப்புமுனையாகும். நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் இந்த வசதிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்போம்- என்றார். (எ-இ)

# கஞ்சாத்தோட்டம் இருவர் கைது!

கொழும்பு, செப்.20

உடவளவை தேசிய பூங்காவுக்குள் கண்டுபிடிக்கப்பட்ட கஞ்சாத் தோட்டம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அவர்களிடமிருந்து சட்டவிரோதத் துப்பாக்கி, வெடிமருந்துகள், தோட்டத்துக்கு நீர்ப்பாசனம்செய்யப் பயன்படுத்தப்படும் மோட்டர் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ச-இ)



# அலி ரொஷானுக்கு கடுங்காவல் சிறை

கொழும்பு, செப்.20

அனுமதிப் பத்திரமின்றி யானை ஒன்றைத் தன்வசம் வைத்திருந்தமை உள்ளிட்ட இரு குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட அலி ரொஷான் என அழைக்கப்படும் நிராஜ் ரொஷான் என்பவருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. அத்துடன், அவருக்கு ரூ. 20.6 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டது. (ச-இ)

# கஞ்சா கடத்தல்; கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, செப்.20

மோட்டார் சைக்கிளில் கஞ்சா கொண்டுசென்ற குற்றச்சாட்டில் சமனலவேவப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுமுன்தினம் பலாங்கொடைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ 765 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)



# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப்.20

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக, 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை ஞாயிற்றுக்கிழமை - புரட்டாதி 5
21.09.2025
சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கு நடிப்புப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.20

சிறுவர் தினத்தை முன்னிட்டு செயற்திறன் அரங்க இயக்கம் செயலில் உள்ள நாடக இயக்கம் நடத்துகின்ற சிறுவர் தனிநடிப்புப் போட்டியின் இறுதிப்போட்டி நல்லூரில் அமைந்துள்ள முற்றம் வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்குகொள்வதற்கான வயதெல்லை 9-16 வயது வரையாகும். போட்டியாளர்கள் தாம் விரும்பிய கருப்பொருளில் 12-15 நிமிடங்கள் நடிக்கலாம். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு 1ஆம் பரிசாக 10,000 ரூபாவும், 2ஆம் பரிசாக 6000 ரூபாவும், 3ஆம் பரிசாக 4000 ரூபாயும் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் https://forms.gle/mYyhThec8F4k6iM68 எனும் கூகிள் படிவத்தை நிரப்பி எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளலாம். தெரிவாகும் நாடகங்கள் நாடகவிழாவில் மேடையேற்றப்படும். (ச-41)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், செப்.20

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் கல்லூரி மண்டபத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. கல்லூரி முதல்வர் ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக்கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன், சிறப்பு விருந்தினராக மாணிக்கவாசகன் திருவாசகம், கௌரவ விருந்தினராக திருமதி சுதாமதி ஸ்ரீ சுப்ரமணியம் ஆகியோர் கலந்துகொள்வர். ஓய்வுநிலைப் பிரதி அதிபர் சபாபதி குகதாசன் நினைவுப் பேருரையாற்றுவார். (ச-25, 17)

# முல்லையில் நிலமிழக்கும் தமிழர்கள் பெரும்பான்மையினர் ஆக்கிரமிப்பு!

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, செப். 20

**முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் தமிழ்மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள் பெரும்பான்மையினத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவரும் அதேவேளை தமிழ்மக்கள் தமது பூர்வீக மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடும்போது வனவளத்திணைக்களம் மற்றும் பொலிஸ்விசேட அதிரடிப்படையினர் தடுத்து இடையூறு விளைவிக்கின்றனர். இந்தச் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ்மக்கள் யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு கடந்த 2011ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே தமது பூர்வீக வாழிடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

மீள்குடியமர்த்தப்பட்ட பிற்பாடு அந்த மக்கள் தாம் பூர்வீகமாக நெற்செய்கையில் ஈடுபட்டுவந்த முந்திரிகைக்குளம், ஆமையன்குளம், சாம்பான்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டபோது தாம் நெற்செய்கைக்குப் பயன்படுத்திவந்த குளங்கள் மற்றும் அக்குளங்களின் கீழான வயல்நிலங்களைப் பெரும்பான்மை இனத்தவர்கள் பயன்படுத்திவந்துள்ளனர்.

பெரும்பான்மையினத்தவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த தமது பூர்வீக விவசாயக் குளங்களையும் விடுவிக்குமாறு தொடர்ந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும் அவை விடுவிக்கப்படவில்லை.

குறித்த நீர்ப்பாசனக்குளங்களின் கீழான வயல்நிலங்கள் பலவற்றுக்கு தமிழ் மக்களிடம் ஆவணங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த நீர்ப்பாசன வயற்காணிகளை ஆக்கிரமித்துள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு கடந்த 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய அரசால் மகாவலி அதிகாரசபையின் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.


தமது நீர்ப்பாசன வயல் நிலங்களையும் இழந்துள்ள எல்லைக்கிராமத் தமிழ்மக்கள் மானாவாரி நிலங்களிலேயே தற்போது தமது நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

எனினும் குறித்த மானாவாரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் நெற்செய்கை மேற்கொள்ளும்போது வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை என்பன தொடர்ச்சியாக இடையூறுகளை ஏற்படுத்திவருகின்றன. இவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்தினால் இந்தமக்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும். எனவே எமது மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றவகையில் செயற்படும் திணைக்களங்களின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார். (ச-246,26)

## நீர்வேலி ப.நோ.கூ.சங்க 12கிளைகளுக்கு இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.20

வலி. கிழக்கு தென்பகுதி(நீர்வேலி) ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான பொதுச்சபைக் கூட்டங்கள் அண்மையில் நடைபெற்றன. இதில் நிறைவெண் இன்மையால் நடைபெறாத 12 கிளைகளுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் இன்று சனிக்கிழமை குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் நடைபெறவுள்ளன. வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கான கடிதங்கள் ஏற்கனவே தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. அதன்படி கூட்டங்கள் நடைபெறாத நீர்வேலி இராச வீதி 7, நீர்வேலி ஐங்கரன் 11, கோப்பாய் மத்தி 17, கோப்பாய் பழைய வீதி 18, கோப்பாய் தெற்கு 20, 21,22, உரும்பிராய் கிழக்கு 26, உரும்பிராய் வடக்கு 29, ஊரெழு 30, ஊரெழு மேற்கு 31, இருபாலைச் சந்தி 33 ஆகிய கிளைகளின் கூட்டங்களே நடத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



## வவுனியா மருத்துவமனையில் இருதய சத்திரசிகிச்சைக்கூடம்!

நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது

வவுனியா, செப்.20

வவுனியா பொது மருத்துவமனையில் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த இருதய சத்திரசிகிச்சை நிலையம் நேற்றுமுதல் செயற்பட ஆரம்பித்துள்ளது.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியோடு உபகரணகத்தொகுதியோடு அமைக்கப்பட்டிருந்த இருதய சத்திரசிகிச்சைக்கூடம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இரு வருடங்களுக்கு முன்னர் திறக்கப்பட்டது. ஆயினும் மருத்துவ நிபுணர்கள் இன்மையால் அது செயற்படாது இருந்தது.

அண்மையில் சுகாதார அமைச்சால் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் தி. வைகுந்தன் நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த சத்திரசிகிச்சைக்கூடத்தை இயங்கவைக்கும் நடவடிக்கைகளை அவர் எடுத்திருந்தார். ஆளணிப் பற்றாக்குறை உள்ளபோதும், யாழ் மாவட்டத்தின் மூத்த இருதய சத்திரசிகிச்சை நிபுணர் பி. லக்ஸ்மன், வவுனியா இருதய சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ஆர். குமார மற்றும் ஏனைய மருத்துவர்கள், மருத்துவமனை நிர்வாகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நேற்றுமுதல் இதய சத்திரசிகிச்சைக்கூடம் இயங்க ஆரம்பித்துள்ளது. (எ-110)



## சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு மறியல்

முல்லைத்தீவு, செப்.20

புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியில் பாதுகாப்புக்காக விடப்பட்ட 8 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 19 வயதுடைய இளைஞர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தாயாரால் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டநிலையில் விசாரணைகளில் குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-19)

## மஹாளய பட்சம் திதி நாளையுடன் நிறைவு

யாழ்ப்பாணம், செப்.20

இறந்தவர்களை நினைவுகூர்ந்து அனுஷ்டிக்கப்படும் மஹாளய பட்சம் திதி கடந்த 7ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெறவுள்ளது.

இந்த நாள்களில் இறந்த மூதாதையர்களின் ஆத்மா சாந்தியடையப் பிதிர்சங்கற்பம் செய்தும், தானம் வழங்கியும் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகளை [illegible] (ச-41,17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்குப் பரவலுக்குப் புகையூட்டல் எரிபொருள் உடனுக்குடன் வழங்கப்படும்

## மானிப்பாய் பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.20

டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அந்த இடத்தில் புகையூட்டலுக்குத் தேவையான எரிபொருள் சபையால் விநியோகிக்கப்படும் என வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை யின் கடந்த அமர்வில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பொதுச் சுகாதாரப் பணிமனை ஊடாக எமக்கு 400, 500 லீற்றர் எரிபொருள் கோரிக்கை முன்வைத்தநிலையில் அதனை வழங்கி வந்தோம். இனிமேல் அந்தச் செயற்பாட்டை நிறுத்தி, டெங்கு அபாயம் காணப்படும் அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவையான எரிபொருளை அவ்வப் போதே உடனுக்குடன் வழங்குவோம். சபை ஊழியர்கள் எரிபொருளை எடுத்துச் சென்று புகையூட்டப்படவேண்டிய இடத்தில் வைத்து பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அதிகாரிகளிடம் ஒப்படைப்பார்கள். அதனை அவர்கள் பயன்படுத்தமுடியும் என வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் ஜெசீதன் தெரிவித்தார். (ச-27)

# இனிய நந்தவனம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.20

எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தின் "இனிய நந்தவனம்" நூல் வெளியீட்டு விழா மூளாய் 782, பிரதான வீதியிலுள்ள அலுவலக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதரக மேலதிகாரி ஸ்ரீ.சங்கரன் ராஜகோபால், சிறப்பு விருந்தினராக டவர் அரங்க மன்றத்தின் பிரதிப்ப ணிப்பாளர் ச.ஜெயப்பிரகாஷ், மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் பா.பாலசுப்பிரமணியம், மூளாய் அ.மி.த.க. பாடசாலை அதிபர் வி.தயசீலன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-25)

# Invitation for Bids (IFB)
# MUNICIPAL COUNCIL, VAVUNIYA

1. The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of Mayor, Municipal Council, Vavuniya now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | NP/14/43(2)/06/ WD/CF/32/2025 | **Package-07-2025** | | 2.79 | C9 & Above (Highway Construction) | 28,000.00 | 23.12.2025 | 84.0 |
| | | Reconstruction of 900MM x 450MM Box culvert at Paddanichoor 1st lane | 0.42 | | | | | |
| | | Improvement to Compost Road | 0.85 | | | | | |
| | | Improvements to Pandarikulam 1st lane | 1.52 | | | | | |
| 2 | NP/14/43(2)/06/ WD/CF/33/2025 | **Package-08-2025** | | 2.63 | C9 & Above (Highway Construction) | 27,000.00 | 23.12.2025 | 84.0 |
| | | Reconstruction of 900MM x 450MM Box culvert at Paddakadu 1st lane | 0.51 | | | | | |
| | | Improvement to Paddakadu 1st Lane | 2.12 | | | | | |
| 3 | NP/14/43(2)/06/ WD/CF/34/2025 | **Package-09-2025** | | 3.81 | C9 & Above (Building Construction) | 39,000.00 | 23.12.2025 | 84.0 |
| | | Renovation of Kurumankadu Elders Park | 1.69 | | | | | |
| | | Renovation of Public Library, Vavuniya | 2.12 | | | | | |
| 4 | NP/14/43(2)/06/ WD/CF/35/2025 | **Package-10-2025** | | 2.54 | C9 & Above (Highway Construction) | 26,000.00 | 23.12.2025 | 84.0 |
| | | Reconstruction of 900MM x 450MM Box culvert at Moonrumurippu School lane | 0.42 | | | | | |
| | | Improvement to Alaikarai Veethy 1st lane at Sinnaputhukulam | 2.12 | | | | | |
| 5 | NP/14/43(2)/06/ WD/CF/36/2025 | **Package-11-2025** | | 2.33 | C9 & Above (Highway Construction) | 24,000.00 | 23.12.2025 | 84.0 |
| | | Improvements to Hospital Circular road | 0.21 | | | | | |
| | | Improvement to Soya Lane | 2.12 | | | | | |
| 6 | NP/14/43(2)/0 6/WD/CF/37/2 025 | Improvements to Sri Lanka Red Cross road | 2.12 | | C9 & Above (Highway Construction) | 22,000.00 | 23.12.2025 | 84.0 |
| 7 | NP/14/43(2)/0 6/WD/CF/38/2 025 | Improvements to Thirunavatkulam Sivan Kovil Veethy (Stage II) | 2.12 | | C9 & Above (Highway Construction) | 22,000.00 | 23.12.2025 | 84.0 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. Interested eligible bidders may obtain further information from Mayor, Municipal Council, Vavuniya (T.P:024-222 2275/ 024 222 8066 email: ucvavuniya@yahoo.com) from 09.00 Hrs to 14.30 Hrs and inspect the bidding documents at the address Mayor, Municipal Council, Vavuniya.
4. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule / Bidding Data" of the Procurement Document.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Mayor, Municipal Council, Vavuniya from 22.09.2025 until 03.10.2025 from 09.00 Hrs to 14.30 Hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00).The method of payment will be by cash.
6. Bids must be delivered to the address Chairman, Regional Procurement Committee, Municipal Council, Vavuniya on or before 07th October 2025 and 10.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
7. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
8. The pre-bid meeting will be held on 26.09.2025 at 10.30 Hrs at the Municipal Council, Vavuniya.

The address (es) referred to above is (are):


**Chairman**
**Regional Procurement Committee,**
**Municipal Council,**
**Vavuniya.**
**20.09.2025**

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு 40 - 50 வயதிற்கும் இடைப்பட்ட வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 086 8917
(CS/59439) JK

நெல் விற்பனைக்கு
B.G 406 நெல் விற்பனைக்கு உள்ளது. விவசாயத் திணைக்களத்தால் பெறப்பட்ட விதையிலிருந்து பெறப்பட்டது.
தொடர்பு: 076 420 6362

விற்பனைக்கு
25, 15, 03, 02, 01,Hp பாவித்த மின்மோட்டார்களும் Scootypept Schooter விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு
தொடர்பு:- 077 868 9705
(CS/59426) JK


வாடகைக்கு, விற்பனைக்கு
கிட்டுப்பூங்கா செம்மணி வீதியில் கடை வாடகைக்கு உண்டு. மற்றும் கடையில் உள்ள தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 070 777 0394
(CS/59438) JK




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி வளப்பற்றாக்குறை விரைந்து சீர்செய்யுங்கள்!

## பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுசென்றார் மஸ்தான் எம்.பி.



கொழும்பு, செப்.20

வன்னி மாவட்டத்தில் காணப்படும் கல்விப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு எட்டவேண்டும் என்றும் இதுதொடர்பில் வவுனியாவுக்கு விஜயம்செய்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தவேண்டும் என்றும் பிரதமரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார். வன்னி மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் பிரதமருடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அண்மையில் மேற்கொண்ட பேச்சின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

வன்னி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை கட்டுமானப்பணிகள் நிறைவு செய்யப்படாது பல வகுப்பறைக் கட்டடங்கள் காணப்படுகின்றன. அத்துடன் சவுதி அரசால் வழங்கப்பட்ட அக்கரைப் பற்று. நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டமும் இழுபறிகளுடன் நிரந்தரத் தீர்வை எட்டாதுள்ளது. எனவே அவற்றை நிவர்த்திசெய்யப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். இதன்போது பிரதமர், இவ்விடயங்கள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

இவ்வருட நிதிகளிலிருந்து குறித்த வேலைத்திட்டங்களை நிவர்த்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்படும் என உறுதியளித்தார். (ச-60)


**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலியில் பரப்பு 01, 02, 2 1/2 பரப்பு காணிகள் விற்பனைக்கு. பலாலி வீதியில் இருந்து 75 மீற்றர் தூரத்திலும் திருநெல்வேலி சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ளது.

தொடர்பு: 077 253 2575


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 20.08.2025 புதன்கிழமை அமரபக்க திரயோதசி ஆவணி மாத பிரதோசத்தில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி**

### அமரர் பரமசிவராசா நகுலேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த 18.09.2025 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையி நடைபெற்றது தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.09.2025) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இலங்கை வேந்தன் கலைகல்லூரி மண்டபத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**8/1, புகையிரத தெற்கு வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## செல்லைய்யா சிவபாலன்

### (ஓய்வு நிலை ஊழியர் SUN RICE வியாபார நிலையம் சாவகச்சேரி)



அல்வாய் தெற்கு ஓடையை பிறப்பிடமாகவும், 403, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லைய்யா சிவபாலன் அவர்கள் கடந்த (18.09.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லைய்யா-சின்னம்மா தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம்-அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும், சுலோசனா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் சந்திரபோஸ், காலஞ்சென்றவர்களான சந்திரன், பூமா, உமா ஆகியோரின் அன்புச் சகோதரரும், குகரூபன் (பிரான்ஸ்), சிவகொளரி (பிரான்ஸ்), ராகவன் (பிரான்ஸ்), றொசாந்தன் (பிரான்ஸ்), கெங்கா (ஆசிரியர் வித்தியானந்த கல்லூரி-முல்லைத்தீவு), பிருந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைமகள் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), டயானா (பிரான்ஸ்), சுகேந்தினி (ஆசிரியர் வித்தியானந்த கல்லூரி-முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கெவின், நிவேக், அபிரா, ஹர்யித், டெலுக்சன், வர்சன், அனா, ஆரி, அகில் ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றசுந்தரலிங்கம் மற்றும் தயாளபூபதி, தேவராசா, காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும்விஜயகுமாரி, யோகராணி, சொர்ணலிங்கம், நடேசாஸ்வரி, கிருபாஸ்கரன், அன்னகிருபா, குலகேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 12.08.1948 — **மறைவு** 18.09.2025

**இல.403,**
**கண்டி வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி**

**தகவல்:**
**மகன்**
**077 606 3201**
**077 428 3129**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான

# ஆதாரம் திரட்டும் செயற்றிட்டத்தை ஒத்திவைக்கக் கோரிய சீனா, பாக்.!

### அடியோடு நிராகரித்தது பிரிட்டன்

**கொழும்பு, செப்.20**

**பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை தொடர்பாக நடைபெற்ற உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில், இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடவேண்டும் என்று சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை தொடர்பில் பேரவையில் ஏற்கனவே கால நீடிப்புச் செய்யப்பட்டு நடைமுறையில் இருந்த 57/1 தீர்மானம் முடிவுக்கு வந்துள்ளது. அதனால் தற்போதைய கூட்டத்தொடரில் இணையனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் திருத்தங்கள் உள்வாங்கப்படாத 60/எல்.1 எனும் முதலாவது வரைவு வெளியிடப்பட்டுள்ளது.

அந்தப் பிரேரணை தொடர்பான உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் நடைபெற்றது.

அதில் பிரிட்டன், வட அயர்லாந்து, கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா ஆகிய நாடுகளின் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதிகளும், பேரவையில் அங்கம் வகிக்கும் இலங்கைக்கு ஆதரவான மற்றும் எதிரான சில நாடுகளின் பிரதிநிதிகளும், ஜெனிவாவுக்கான இலங்கையின் பிரதிவதிவிடப்பிரதிநிதி உள்ளிட்ட அதிகாரிகளும், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும்வகையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை இரண்டு வருடங்களுக்குப் பிற்போடவேண்டும் என்று சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கோரிக்கைமுன்வைத்தனர். அதைப் பிரிட்டன் மறுத்துவிட்டது என்று நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)



## பண்ணை வீதியின்

# புனரமைப்பு தாமதிப்பு; போக்குவரத்தில் சிரமம்!

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். நகரிலுள்ள தபாலக சுற்றுவட்ட வீதியில் பண்ணைக்குச் செல்லும் பாதையில் ஒரு பகுதியில் இடம்பெற்றுவரும் புனரமைப்புப் பணிகளின் தாமதம் காரணமாகப் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த வீதியை கொங்கிறீட் வீதியாக மாற்ற யாழ். மாநகராட்சி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தற்காலிகப் போக்குவரத்துக்காகப் பயணிகள் முற்றவெளி மைதானத்தைப் பயன்படுத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25, 17)

# வலி. மேற்குப் பிரதேசசபையில் தியாகதீபத்துக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.20

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று தவிசாளர் ச.ஜயந்தன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றபோது தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான சுபாஜினி, தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக முன்வைத்த கோரிக்கைக்கமைய அனைவரும் இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தி, ஈகைச்சுடர்கள் ஏற்றி தியாகதீபத்தை நினைத்துருகினர். (ச-27,66)



# சட்டவிரோதச் செயல்களுக்கு விரைவில் முடிவுகட்டப்படும்

### கற்கோவளத்தில் அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், செப்.20



பருத்தித்துறை, கற்கோவளத்தில் இடம்பெறும் மணல் அகழ்வு, வாள்வெட்டுச்சம்பவங்கள் உட்பட அனைத்துச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் முடிவு கட்டப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகர் கடந்த புதன்கிழமை உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் சகிதம் அங்கு சென்றிருந்தார். அந்தப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் கும்பல்களால் மீன்வாடிகள் சேதமாக்கப்பட்டுத் தீவைக்கப்பட்ட சம்பவம், மீனவர்கள்மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் என்பவை தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மீனவர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகள் ஊடாகவே மக்களுக்கு அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இனி சட்டத்தின் ஆட்சிதான் நடக்கும் என்பதை வன்முறைக் கும்பல்கள் புரிந்துகொள்ள வேண்டும். சட்டத்தின் பிடிக்குள் இருந்து தவறிழைத்தவர்கள் தப்பவேமுடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (எ-26)



# ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் கொலை

கொழும்பு, செப்.20

மீரிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெந்தபொலப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 33 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் குறித்த பெண்ணின் கணவர் சந்தேகநபராக கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுடன் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# சுருக்குவலை மீன்பிடி: கட்டைக்காட்டில் உயர்வு!

### மீனவப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குக் கட்டைக்காடுப் பகுதியில் சட்டவிரோத சுருக்குவலை கடற்றொழில் மீன்பிடி இடம்பெற்றுவருவதால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்று வடமராட்சி வடக்கு மீனவப்பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கட்டைக்காடு மீனவர்கள் அதிகளவானோர் சட்டவிரோதச் சுருக்குவலை மீன்பிடியில் ஈடுபடுவதால் அதிகளவான சிறிய மீனினங்கள் பிடிக்கப்படுவதுடன் அந்த மீனினங்கள் இறந்த நிலையில் மீண்டும் கடலில் கொட்டப்படுகின்றன. இதனால் சிறு மீன்பிடியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரி, இவ்வருடமும் அதிகளவானவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது - என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், செப்.20

உடுவில் கோட்ட அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் உடுவில் கல்விக்கோட்டத்திலிருந்து 2020ஆம் ஆண்டின் பின் ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 21 அதிபர்களுக்கான சேவைநலன் பாராட்டுவிழா கடந்த வியாழக்கிழமை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. (ச-41)





# புத்தகப்பைகள் அன்பளிப்பு

அவுஸ்திரேலியாவில் இருந்து 24 மணிநேர சேவையில் ஒலிபரப்பாகும் 'தாயகம்' தமிழ் ஒலிபரப்புச் சேவை வானொலி 'ஒன்றாய் இணைவோம்' திட்டத்தின் ஊடாக மாணவர்களுக்குத் தேவையான பாடசாலைப் பைகளை வழங்கியுள்ளது. இந்த நிகழ்வு மல்லாவி, சோராங்கண்டல் பிரதேசத்தில் உள்ள மங்கைநகரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பைகளுக்கான நிதியுதவியை தாயகம் வானொலியின் இயக்குநர் விஜய் இராஜகோபால் வழங்கினார். (ச-25)

# போசாக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.20

போசாக்கு ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் ஆரம்பகாலக் கற்றல் குறித்த உலகளாவியக் கருத்தரங்கு நிகழ்வு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றது.

யாழ். இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் போலோ ஆய்வகம் என்பவற்றின் ஏற்பாட்டில் 'ஒரு குழந்தையின் எதிர்காலத்துக்கான இணைப்பு' எனும் தலைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியாவிலிருந்து வருகைதந்த கல்வி உளவியலாளரும், சிறுவர் உரிமைக்கான நிபுணருமான கலாநிதி சரண்யா ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ச-40,66,113)



# நீர்வள முகாமைத்துவக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.20

வேலணைப் பிரதேச நீர்வள முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் த. அகிலன் தலைமையில் சிறிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது, சாட்டி மண்கும்பான் பிரதேசத்தில் ஆழ் கிணறுகளின் அளவுக்கு அதிகமாக அகத்து உறிஞ்சல் காரணமாக நிலத்தடி நீர் பாதிப்படைதல் தொடர்பாகவும், மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ச-25. 9)



# வட்டுக்கோட்டையில் பாரதியார் நினைவு

மகாகவி பாரதியாரின் 104 ஆவது ஆண்டு நினைவு தினம் கலாநிதி சிதம்பர மோகன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபியில் இடம்பெற்றது.

இதன்போது பாரதியாரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் மறவன் புலவு சச்சிதானந்தம், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-27)

# சிரமதானப் பணிகள்

மன்னார் நகரசபையினால் வளமான நாடும் அழகான வாழ்க்கையும் 'மறுமலர்ச்சி நகரம்' என்ற தொனிப்பொருளில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் அண்மையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டன. தொடர்ந்து அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இராணுவம் மற்றும் கடற்படை ஆகியோரால் இணைந்து சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-41-56)





உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஒளிரூட்டு ஸ்டிக்கர் ஒட்டும் செயற்பாடு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபையினால் புதுக்குளம் மகாவித்தியாலயத்துக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-25,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் நினைவாக குருதிக்கொடை முகாம்கள்

யாழ்ப்பாணம், செப். 20
தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரு குருதிக்கொடை முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

'எமக்காக உயிர் கொடுத்தவனுக்காக உதிரம் கொடுப்போம்!' எனும் தொனிப்பொருளில் இந்தக் குருதிக்கொடை முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை ஒரு குருதிக்கொடை முகாம் நடைபெறவுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் காலை 9 மணிமுதல் பிறிதொரு குருதிக் கொடை முகாம் நடைபெறவுள்ளது. (ம-66-20-26)

## காற்றாலைகள்...

காற்றாலைத் திட்டத்தைக் கைவிடுமாறு கோரியும், கனிய மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியும் மன்னாரில் கடந்த 45 நாள்களுக்கும் மேலாகப் பொதுமக்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர். எனினும், பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. இதைத் தொடர்ந்தே, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து சென்ற நூற்றுக்கணக்கான மக்களுடன், கொழும்பைச் சேர்ந்த தமிழர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களும், இடதுசாரி சிங்கள அமைப்பினரும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

மன்னார் மக்களின் விருப்பத்துக்கு மாறாக, எந்தச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படாது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்திருந்தார். எமது சூழலியலுக்குப் பெரும் பாதிப்பைத் தரும் காற்றாலைத் திட்டத்தைக் கைவிடுமாறு நாங்கள் போராட்டம் நடத்திவருகின்றோம். விரைவில் இரண்டு மாதங்களை எமது போராட்டம் எட்டவுள்ளது. எனினும், இதுவரை அந்தத் திட்டம் நிறுத்தப்படவில்லை. எனவே, சொல்வதொன்று, செய்வதொன்றாக அரசாங்கம் செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

கனிய மணல் அகழ்வு உள்ளிட்ட சமூக விரோதச் செயல்கள் மன்னாரில் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அதுபோல், காற்றாலைத் திட்டமும் கைவிடப்பட வேண்டும். இந்த விடயங்களுக்குத் தீர்வுகாணாமல் நாங்கள் இங்கிருந்து செல்லப்போவதில்லை - என்றனர். இந்தப் போராட்டம் காரணமாக, ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## போதைப்பொருள்...

வளைப்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப் பின்போதே அந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரின் உடைமையில் இருந்து போதை மாத்திரைகள், ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருள்கள் என்பன கைதுசெய்யப்பட்டுள்ளன. சந்தேகநபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100)

## கூலர்...

கூலரும், சைக்கிளும் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது, சைக்கிளில் பயணித்த சுற்றுலாவியான ஜேர்மனிய பிரஜை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கரகராஜன்குள பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (அ-ம-110)

## பேருந்திலிருந்து...

நேற்றுமுன்தினம் இந்தத் துயரச்சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி - உருத்திரபுரத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் சுகிர்தன் (வயது- 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். உயிரிழந்த இளைஞன் பயணித்த பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66-113)

## மயங்கி...

சேர்ந்த பிரபாகரன் சாருஜன் (வயது- 29) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆலயத்தில் மயங்கி வீழ்ந்த அவரை மீட்டு உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்த்த நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## ஐ.தே.க...

"ஆண்டு விழா, கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் இன்று நடைபெறுகின்றது. இந்த நிகழ்வுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கட்சித் தலைவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு விடுத்திருந்தது. எனினும், இந்த மாநாட்டில் பங்கேற்பதை சஜித் தவிர்த்துள்ளார். அவருக்குப் பதிலாக கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட குழுவினர் பங்கேற்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## காற்று...

உத்தரவிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் சுற்றுச்சூழலில் போடப்படும் குப்பைகள் மற்றும் இரசாயனக் கழிவுகளால் காற்று மாசுபாடு ஏற்படுகிறது எனவும், இந்தச் சூழ்நிலையைத் தடுக்கப் பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டுமெனக் கோரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் உமாசுகி நடராஜா தாக்கல் செய்த ரிட் மனு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரோஹந்த அபேசூரிய, நீதிபதி கே. பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணிகளிடம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதி யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாட்டைக் குறைப்பதில் சுற்றுச்சூழல் சட்டங்களின் விதிகள் பின்பற்றப்பட்டுள்ளதா? என்று விசாரித்தார். யாழ்ப்பாணத்தில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுக்க கட்டளைச் சட்ட விதிகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதிகள் அமர்வு யாழ். மாநகர சபைக்குத் தெரிவித்தது. இதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை தேவையான ஆதரவை வழங்க வேண்டுமெனவும் தலைமை நீதிபதி குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தில் காற்றின் தரத்தை மதிப்பிட்டு அதன் கண்டுபிடிப்புக்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக மத்திய சுற்றுச்சூழல் ஆணையகத்துக்கு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் மத்திய சுற்றுச்சூழல் ஆணையகம் நேற்றையதினம் தனது அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் படி நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் திருப்திகரமான மட்டத்தில் இல்லையென நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் மூத்த சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே மன்றில் முன்னிலையாகினார். (அ-ம-66)

## ராஜபக்சக்களின்...

'அரசியல் சூறாவளியொன்று' வீசும். அது ராஜபக்சக்களின் எழுச்சியாக அமையும். கடந்த காலங்களில் இடம்பெற்றதை விடவும் பெரியதொரு எழுச்சியாகவும் அது அமையலாம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார்.

மஹிந்தவின் கருத்துத் தொடர்பில் அமைச்சர் லால்காந்தவிடம் ஊடகங்கள் வினவியபோதே, 'ராஜபக்சாக்களின் அரசியல் சகாப்தம் மீண்டும் வருவதற்கு வாய்ப்பில்லை' என்று குறிப்பிட்டார். 'தற்போது இருக்கும் அரசியல் கலாசாரத்தை விட ராஜபக்சக்களின் ஆட்சி எந்த வகையிலும் உயர்ந்தது அல்ல. ஆதலால், அந்தக் காலத்துக்கு மக்கள் திரும்பிச் செல்ல மாட்டார்கள்' என்றும் லால்காந்த தெரிவித்துள்ளார்.

'இலங்கையில் அரசியற் தலைவர்களின் சொத்து விவரங்கள் இதுவரை வெளியிடப்பட்டதே கிடையாது. எமது ஆட்சியில்தான் அரசியற் தலைவர்களின் சொத்து விவரங்களை பொது வெளிக்குக் கொண்டுவந்தோம்' என்று அமைச்சர் லால்காந்த மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## வல்லிபுரம்...

தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை பாம்புத் திருவிழாவும், இரண்டாம் திகதி வியாழக்கிழமை கம்சன் போர் திருவிழாவும், மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், நான்காம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், ஆறாம் திகதி திங்கட்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும், ஏழாம் திகதி செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்த திருவிழாவும் இடம்பெற்று மாலை கொடி இறக்கம் நடைபெறவுள்ளது. (அ-ம-100)

## கைதானோருக்கு...

கற்கோவள பகுதிகளில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணற்கடத்தலை மீனவர்கள் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து, கடந்த 13ஆம் திகதி சிலர் இணைந்து மீனவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். மணல் கடத்தலில் ஈடுபட்டுவரும் நபர்களே தம்மீது தாக்குதல் நடத்தியதாக மீனவர்கள் பொலிஸாரிடம் முறையிட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஆறு பேரைக் கைது செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, சந்தேகநபர்கள் ஆறு பேரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரைக் கைதுசெய்ய வேண்டியுள்ளது. அவர்கள் தலைமறைவாகியுள்ளனர் என பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## திலீபனின்...

சிவில் செயற்பாட்டாளர்கள் இணைந்து அந்த உருவப்படத்தைப் பொருத்தி கடந்த நான்கு நாள்களாக அஞ்சலித்து வந்தனர். இவ்வாறான நிலையிலேயே, அந்த உருவப்படம் பொலிஸாரால் திடீரென அகற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டுக்கு, திருகோணமலை சிவில் செயற்பாட்டாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ-ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனைக்கு**
நல்லூர் குறுக்கு வீதியில்
நல்ல சுற்றாடலில்
6 3/4 பரப்பு காணி
விற்பனைக்கு.
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு
078 343 9487, 077 364 0941
(CS/59702) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**
நாவற்குழி அமிர்தா வீதியில்
இருபக்க பாதைகளை
உடைய 16 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 711 2349
076 945 6929
Whatsapp:- 077 846 6182
(CR/46081) JK

**வேலையாட்கள் தேவை**
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு
வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண் / பெண்
வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 456 9678
(CS 59440) E


படங்கள் ஐ. சிவசாந்தன்



## தியாகதீபம் திலீபனின் 5ஆம் நாள் நினைவு!

யாழ்ப்பாணம், செப்.20
தியாகதீபம் திலீபனின் ஐந்தாம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியடியில் இடம்பெற்றது. இதன்போது சுடரேற்றி, ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டுத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலும் திலீபனின் உருவப்படம் முன்பாகச் சுடரேற்றி மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-41-66)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன், யாழ் மாநகர சபை முன் வீதி.
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்.
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m.
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m.

இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
ஒருபரப்பின் விலை - 30 000 000 (மூன்று கோடி)
நல்ல சுற்றுச் சூழல்.
அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளது.
தொடர்புக்கு - 077 468 3354, 077 288 0152
076 860 2770
Golden Real Estate (Pvt)Ltd

## திருக்குறள் போட்டி

யாழ்ப்பாணம், செப்.20
அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் வருடாந்தத் திருக்குறள் போட்டி, யாழ்.மத்திய கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. சபையின் பொதுச்செயலாளர் க.சண்டேஸ்வரராஜாவின் நெறிப்படுத்தலில் ச.சாம்பசிவத்தின் தலைமையில் போட்டிகள் நடைபெறும். விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் திருமதி செல்வகுணாளன் கலந்துகொள்வார். (ச-25)

## பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 20
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான பணிப்பாளர் சபையைத் தெரிவுசெய்வதற்கான பொதுச்சபைக் கூட்டம் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன் தலைமையில் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அண்மையில் நடைபெற்ற கிளைக்குழுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச-25,9)

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், Training college முன்பாக 14 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.
- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை
தொடர்புகளுக்கு:- விமல்
076 755 8606, 074 338 4481, 077 638 5683

## 'பஞ்சவர்ணநரியார்' நல்லூரில் நாடகம்

யாழ்ப்பாணம், செப்.20
செயற்றிறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் படைப்பாற்றலுக்கும், ஆளுமை விருத்திக்கு மான களமாக வாராந்தம் இடம்பெறும் சிறுவர் மகிழ்களம்: நாடக இரவு நிகழ்வு இன்று சனிக்கிழமை நல்லூரில் நடைபெறவுள்ளது. இன்று மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் முதலாவது குறுக்குவீதியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் முற்றம் அரங்கில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பஞ்சவர்ணநரியார் நாடகம் மேடையேறவுள்ளது. அத்துடன் சிறுவர்கள் மகிழ்ந்திருக்கும்வகையில் வேறு பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

**வேலையாட்கள் தேவை**
கொக்குவில் தாவடியில் இயங்கிவரும்
பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு
பொதியிடுதல் வேலைக்கு ஆட்கள்
தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
(20 -35 வரை)
சம்பளம்: 35000/=
தொடர்பு: 076 096 9728

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ்நகரை அண்டிய பகுதியில்
4 பேர் கொண்ட சிறிய குடும்பம்
வசிக்கக்கூடிய வீடு வாடகைக்கு
தேவை.
தொடர்புகளுக்கு:
077 317 3156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.